# வியாபார அனுமதி பத்திரம் வழங்குதல்

ஒரு உள்ளூராட்சிமன்றத்தின் எல்லைக்குள் மேற்கொள்ளும் வியாபார அல்லது தொழிற்சாலைகளில் பொது மக்களின் சுகா-தாரத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளவும் கட்டுப்படுத்தவும் துணைவிதிகள் தயாரிக்கப்படும்.

துணைவிதிகளுக்கமைய அனைத்து செயற்பாடுகளையும் நடாத்திச்செல்லும் இடங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அவ்வாறான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது எப்படி?




ஒவ்வொரு வருடமும் நவம்பர் 15ஆம் திகதிக்கு முன் வருமான கணக்கெடுப்புக்கமைய வியாபார அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் வழங்கப்படும்.




ஒவ்வொரு வருடமும் நவம்பர் 20ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சேகரிக்கப்படும்.

வருவாய் ஆய்வாளரால் தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரைக்கு அமைய தேவையான விண்ணப்பப்படிவங்கள் வேறாகவும்,
பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரைக்கு அமைய தேவையான விண்ணப்பப்படிவங்கள் வேறாகவும் ஒதுக்கிட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு ஒப்படைக்கப்படும்.




பொது சுகாதார பரிசோதகர் அல்லது தொழில்நுட்ப அதிகாரியால் சம்பந்தப்பட்ட இடத்தை பரிசோதித்த பின அவரின் பரிந்துரைக்கு அமைய விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரிக்கு வழங்கப்படும்.

பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியால் மாநகர ஆணையாளர் அல்லது தலைவரின் அனுமதியை பெறுவதற்காக முன்வைக்கப்படும்.

˙அனுமதி கிடைத்த விண்ணப்பத்திற்காக வியாபார அனுமதிப்பத்திரத்தை தயாரித்து நகர ஆணையாளர் அல்லது தலைவரின் ஒப்பத்தை பெற்றுக்கொண்டு சேவை கருமபீடத்துக்கு வழங்கப்படும்.




**ජනවාරි 01 ට පෙර**

அனுமதிப்பத்திரம் தயார்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் பணத்தை செலுத்தி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்படும்.

## அனுமதிப்பத்திரத்தை வெளியிட பரிந்துரைக்கப்படாத தருணத்தில் என்ன செய்வது?

குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் டிசம்பர் 15 ஆம் திததிக்கு முன் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியால் விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்படும்.

குறைபாடுகளை மீண்டும் ஆராய முன்கூட்டிய நடைமுறையே ஆரம்பிக்கப்படும்.

Funded by European Union
UNDP
STRIDE | CDLG Capacity Development of Local Governments